மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 ஆம் நாள் வியாழக்கிழமை
இ.ம.எண்.07/2020
அ.வ.எண்.90/2010

வெங்கடாசலம் ... மனுதாரர்/வாதி

/எதிராக/

1. ஜனார்த்தனன்
2. காந்தமணி (இறந்துவிட்டார்)
3. வாசுதேவன்
4. திலகவதி
5. சுகுமாரன்
6. சீரங்கசெட்டியார் (இறந்துவிட்டார்)
7. ஆறுமுகம்
8. சத்தியமூர்த்தி
9. கே.மாதேசன்
10. கருணாநிதி
11. ராஜேந்திரன் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்
12. அய்யம்பெருமாள் ... எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினர்

இம்மனு கடந்த 11.12.2020 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.என்.மணி அவர்கள் ஆஜராகியும், 1, 3 மற்றும் 4 ம்எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கிலேயே தோன்றாதரப்பினர்களாகவும், 2,6 ம்எதிர்மனுதாரர்கள் இறந்தவர்களாகவும், 5 ம்எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.எம்.ராஜேஷ் அவர்கள் ஆஜராகியும், 7,8 ம்எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.டி.ராஜன் அவர்கள் ஆஜராகியும், 9 ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.சித்தன் அவர்கள் ஆஜராகியும், 9 ம்எதிர்மனுதாரர் எதிருரை தாக்கல் செய்யவில்லை என மேற்குறிப்பு செய்த நிலையிலும், 10 மற்றும் 11 ம்எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.சுந்தரேஸ்வரன் அவர்கள் ஆஜராகியும், 12 ம்எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.எல்.கணபதி சுப்ரமணியன் அவர்கள் ஆஜராகியும், 5,7,8,10,11 ம் எதிர்மனுதாரர்கள் எதிருரை தாக்கல் செய்யாததால் தோன்றாதரப்பினர்களாகவும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 1 பிரிவு 10(2) மற்றும் பிரிவு 151ன் கீழ் இம்மனுவின் உத்தேசதரப்பினரை அசல் வழக்கில் 12ம்பிரதிவாதியாக சேர்க்க கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

<u>1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம்</u> : –

வழக்கு நிலுவையின்போது வழக்கு சொத்து குறித்து வில்லங்கம் ஏற்பட்டதை அறிந்த மனுதாரர் வில்லங்கசான்றிதழை பார்த்த போது 8ம்பிரதிவாதி பொய்யாக 07.09.2020ல் உத்தேச தரப்பினருக்கு எழுதிக் கொடுத்துள்ளது தெரியவந்தது. அந்த ஆவணம் சட்டப்படி இல்லா நிலையது மற்றும் வழக்கு நிலுவையின்போது ஏற்பட்டதாகும். மேலும் உத்தேச தரப்பினர் மேற்படி போலியான ஆவணத்தை வைத்துக்கொண்டு மனுதாரரின் சுவாதீனத்தை இடையூறு செய்து வருகிறார். எனவே உத்தேசதரப்பினரை அசல் வழக்கில் 12ம்பிரதிவாதியாக சேர்க்க கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

<u>2) 12ம் எதிர்மனுதாரர்/உத்தேசதரப்பினரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

மனுவில் கூறியுள்ள சங்கதிகள் பொய்யாகும். பாகப்பிரிவினை பத்திரத்தில் ஜனார்த்தனன் என்பவருக்கு சொத்துகள் ஆவண எண்.995/1968ன் கீழ் ஒதுக்கப்பட்டது. அவர் ஆறுமுகம் என்பவருக்கு பொது அதிகார பத்திரம் எழுதிக் கொடுத்ததன் அடிப்படையில் பொது அதிகார முகவர் சத்தியமூர்த்தி என்பவருக்கு 24.02.2010ல் விற்பனை செய்துவிட்டார். அவரிடமிருந்து ச.எண்.189/1ஏ–ல் 0.51.5 ஹக்டேர் புதிய ச.எண்.189/1ஏ 2 –ல் 63 1/2 சென்டை உத்தேசதரப்பினர் கிரயம் பெற்றுள்ளார். கிரய தேதிமுதல் உத்தேச எதிர்மனுதாரர் வழக்குசொத்தில் சுவாதீனத்தில் இருந்து வருகிறார். ஆகவே அந்தக் கிரயப்பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என கூற மனுதாரருக்கு உரிமையில்லை. இந்த எதிர்மனுதாரர் மனுதாரரின் சுவாதீனத்தை இடையூறு செய்வதாக கூறுவது பொய்யாகும். மனுதாரருக்கு எவ்வித உரிமையும், உரிமை மூலமும், சுவாதீனமும் இல்லாமல் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென 12ம்எதிர்மனுதாரர் கூறியுள்ளார்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்களோ, சான்றாவணங்களோ எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர் தரப்பில் வழக்கு நிலுவையின்போது வழக்கு சொத்து குறித்து வில்லங்கம் ஏற்பட்டதை அறிந்த மனுதாரர் வில்லங்கசான்றிதழை பார்த்த போது 8 ம்பிரதிவாதி பொய்யாக 07.09.2020 ல் உத்தேசதரப்பினருக்கு எழுதிக் கொடுத்துள்ளது தெரியவந்தது எனவும், அந்த ஆவணம் சட்டப்படி இல்லா நிலையது மற்றும் வழக்கு நிலுவையின்போது ஏற்பட்டது எனவும், உத்தேச தரப்பினர் மேற்படி போலியான ஆவணத்தை வைத்துக்கொண்டு மனுதாரரின் சுவாதீனத்தை இடையூறு செய்து வருகிறார் எனவும், எனவே உத்தேசதரப்பினரை அசல் வழக்கில் 12 ம்பிரதிவாதியாக சேர்க்க கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) 12 ம்எதிர்மனுதாரர் தரப்பில் மனுவில் கூறியுள்ள சங்கதிகள் பொய் எனவும், பாகப்பிரிவினை பத்திரத்தின் போது ஜனார்த்தனன் என்பவருக்கு சொத்துகள் ஆவண எண்.995/1968 ன் கீழ் ஒதுக்கப்பட்டது எனவும், அவர் ஆறுமுகம் என்பவருக்கு பொது அதிகார பத்திரம் எழுதிக் கொடுத்ததன் அடிப்படையில் பொது அதிகார முகவர் சத்தியமூர்த்தி என்பவருக்கு 24.02.2010 ல் விற்பனை செய்துவிட்டார் எனவும், அவரிடமிருந்து ச.எண்.189/1 ஏ–ல் 0.51.5 ஹெக்டேர் புதிய ச.எண்.189/1 ஏ 2 –ல் 63 1/2 சென்டை உத்தேசதரப்பினர் கிரயம் பெற்றுள்ளார் எனவும், கிரயதேதி முதல் உத்தேச எதிர்மனுதாரர் வழக்குசொத்தில் சுவாதீனத்தில் இருந்து வருகிறார் எனவும், ஆகவே அந்தக் கிரயப்பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என கூற மனுதாரருக்கு உரிமையில்லை எனவும், இந்த எதிர்மனுதாரர் மனுதாரரின் சுவாதீனத்தை இடையூறு செய்வதாக கூறுவது பொய் எனவும், மனுதாரருக்கு எவ்வித உரிமையும், உரிமை மூலமும், சுவாதீனமும் இல்லாமல் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் மனுவினை

தள்ளுபடி செய்ய வேண்டுமென 12ம் எதிர்மனுதாரர் கட்சி செய்துள்ளது தெரியவருகிறது.

(iii) இருதரப்பிலும் 8ம்பிரதிவாதி உத்தேச தரப்பினருக்கு வழக்கு சர்வே எண்ணிலுள்ள ஒரு பகுதியை விற்பனை செய்யப்பட்டுள்ளதை ஒப்புக் கொண்டுள்ளனர். மனுதாரர் தரப்பில் உத்தேச தரப்பினர் பெயரிலுள்ள கிரயப்பத்திரம் செல்லாது எனவும், உத்தேச தரப்பினர் தரப்பில் அந்த கிரயப்பத்திரம் செல்லும் எனவும் கட்சி செய்துள்ளதால் அதுகுறித்து அசல் வழக்கில் தான் தீர்மானிக்க முடியும். மேலும் 8ம்பிரதிவாதி 9ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரயப்பத்திரம் செல்லாது என மனுதாரர் ஏற்கனவே இவ்வழக்கில் பரிகாரம் கோரியுள்ள நிலையில் தற்போது உத்தேச தரப்பினருக்கு ஒரு பகுதி சொத்து 8ம்பிரதிவாதியால் மீண்டும் விற்கப்பட்டுள்ளதால் உத்தேச தரப்பினர் இல்லாமல் இவ்வழக்கினை தீர்மானிக்க இயலாது. ஆகவே உத்தேச தரப்பினர் இவ்வழக்கில் தேவையான தரப்பினர் என முடிவு செய்து இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/—திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:—</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:—</u> இல்லை

ஒப்பம்/—திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.